10th August 1960]

SRI K. B. S. MANI: இந்த நெல் அரிசி, மற்றைய ஜில்லாக்களுக்கு அனுப்பப்படவில்லையென்று சொன்னால் இன்றைய தினம் 48 பட்டணம் படி கொண்ட ஒரு மூட்டை $47\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கப்படுவதன் காரணம் என்ன? இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத்தான் தடை. தென் ஸோனில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் போகலாம். அந்த அளவிலே கொஞ்சம் நெல், அரிசி கேரளாவுக்குப் போயிருக்கிறது.

SRI A. VEDARATHNAM: கேரளாவுக்கு அனுப்பினாலும் வெளியே அனுப்புவதுதான். கேரளத்திற்கு எவ்வளவு அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU: கேரளத்திற்கு அனுப்பம்ப்பட்டிருக்கிற அரிசியின் அளவு 268,657 டன். ரயில் மூலமாக இரண்டு லட்சத்துச் சொச்சமும் ரோடு மூலமாக 67,614 டன்னும் அனுப்பப்பட்டிருக்கிறது.

Madras State Police Officers' Conference

* 66 *Q.*—SRI P. G. MANICKAM:
SRI V. K. KOTHANDARAMAN:
SRI S. M. ANNAMALAI:
கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உதக மண்டலத்திலே 1960-ம் வருஷம் மே மாதத்தில் நடை பெற்ற சென்னை ராஜ்ய போலீஸ் அதிகாரிகள் 4-வது மகாநாட்டிலே கலந்தாலோசிக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM: It will not be in public interest to disclose the details of the proceedings of that Conference.

President, National Project Workers' Union, Kundah

* 67 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the President; National Project Workers' Union, Kundah, was arrested on 22nd April 1960 under the Preventive Detention Act?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI N. K. PALANISAMI: இந்த குந்தா எலெக்ட்ரிசிடி ஓர்க்கர்ஸ் காரியதரிசியை 151-வது செக்ஷன் பிரகாரம் "வாரண்ட்" இல்லாமல் அடைத்து வைக்க வேண்டிய காரணம் என்ன?